

# 5. பின்னல்

ஆடை அலங்காரத்தின் ஒரு அம்சமாக பின்னல் வேலை பயன்படுத்தப்பட்டாலும், குழந்தைகளுக்கான ஆடைகள், பனியன், சட்டை போன்றவற்றையும் பின்னலாம்.

மனை அலங்காரமான கதிரை விரிப்பு, தேனீர் மேசை (டீபோ) விரிப்பு, யன்னல், புடவை போன்வற்றை பின்னும் அமைப்பு ஆதிகாலத்திலிருந்தே இருந்து வருகின்றது.


பின்னலுக்குப் பயன்படுத்தப்படும் எளிய உபகரணங்களை வைத்தே பின்னல் இனங்காணப்படும்.

| பின்னும் ஊசி வகை | இரேந்தை வகை |
|---|---|
| இரேந்தை ஊசி | கை இரேந்தை (குரோசட் ரேந்தை) |
| ஹார்னல் ஊசி | ஹார்னல் இரேந்தை |
| கடைசல் தடி | கடைசல் இரேந்தை (கொட்மல் இரேந்தை) |
| தெடின் ஊசி | தெடின் இரேந்தை |

## 5.1 தனி ஊசியைப் பயன்படுத்திப் பின்னல்

பின்னலின் சிறந்த ஊடகமாக முறுக்குடனான உறுதியான, இழுபடக்கூடிய நூல் வகைகளைக் குறிப்பிடலாம். குரோசட் நூல் (crochet yarn) கைரேந்தைக்கு மிகப் பொருத்தமானதாகும்.


பயன்படுத்தப்படும் நூலின் தடிப்பு, மென்மை என்பவற்றுக்கேற்ப பின்னல் ஊசியினை தெரிந்தெடுத்துக் கொள்வது சிறந்த பின்னலை செய்ய உதவும். பின்னல் வேலைகளைச் செய்வதற்கு இலக்கமிடப்பட்ட பின்னல் ஊசிகள் காணப்படுகின்றன. பயன்பாட்டின் போது பிடிப்பதற்கும், செலுத்துவதற்கும் வசதியாக இருப்பதற்காக இரேந்தை ஊசியின் மத்திய பகுதி தட்டையாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.



கையினால் நூலை பிடித்தல்.

பின்னல் செய்வதற்குப் பழக்கப்பட்ட கையினால் நூலைக் கட்டுப்படுத்தி இலகுவாக இழுபட்டு வரக்கூடியவாறு மற்றக் கையின் விரல்களில் நூலை முறையாக வைத்திருக்க வேண்டும்.


முதற்படியாக சங்கிலிப் பின்னலாகும். அதற்காக ஆரம்பத்தில் பின்னல் ஊசியை பழக்கப்பட்ட கையில் எடுத்து மற்றக் கையிலுள்ள நூலுடன் இணைத்து வளையல் ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும்.



சங்கிலிப் பின்னலின் பல்வேறு சந்தர்ப்பங்கள்

**வளையலைத் தயாரித்தல்**

ஊசியை உள்ளே செலுத்தி மற்றுமொரு தொண்டை (மோதிரம்) பெற்றுக் கொள்ளல். இத்தொண்டை முதலாவது தொண்டையில் இருந்து எடுத்து இறுக்கிக் கொள்ளவும்.




பூரான்பட்டி பின்னல்

எல்லா ஆக்கங்களுக்கும் சங்கிலிப் பின்னல் அத்தியாவசியமாகும்.


அதை ஆரம்பமாகக் கொண்டு பூரான்பட்டி பின்னலைப் பின்னுவது பல்வேறு பின்னலுக்கும் அடிப்படையாக அமையும்.

**பூரான்பட்டிக்கு தொண்டை ஏற்படுத்தி அலங்கார இரேந்தைப்பட்டி பின்னுதல்**




தனிப்பின்னல்

பல சங்கிலிகளைப் பின்னி மறுபக்கம் திரும்பி சங்கிலிப் பின்னல் பின்னும் ஊசியை உட்செலுத்தி மீண்டும் அந்தச் சங்கிலித் துளையினுள் நுளைத்து ஊசியை நூலில் இணைத்து மேலே எடுக்க வேண்டும். ஊசியின் மீது தங்கியிருக்கும் இரண்டு தடங்களையும் ஊசியில் இணைத்து ஒரே முறையில் பாவிப்பதனால் தனிப் பின்னலைச் செய்யலாம்.




இரட்டைப்பின்னல்

சங்கிலித் தொண்டுக்கு ஊசியைச் செலுத்தி முதலில் நூலை ஒரு முறை இணைத்துக் கொள்ள வேண்டும். மீண்டும் நூலை இணைத்து ஊசிக்கு மேல் 3 தொண்டுகளை இடவேண்டும். இந்த மூன்று தொண்டில் இரண்டைப் பாவிக்க வேண்டும். மற்றைய தொண்டுக்குப் புதிய தொண்டுடன் பாவிக்க வேண்டும்.



மூன்று பட்டுப் பின்னல்.


சங்கிலித் தொண்டுக்கு நூலை உட்புகுத்தி இரண்டு முறை இணைத்துக் கொள்ள வேண்டும். அதன்பின் நூல் இரண்டிற்கு இரண்டு மும்முறை பாய்ச்சல் வேண்டும்.




பல்வேறு இரேந்தைப் பட்டிகள்

சங்கிலி, பூரான் தனிப்பட்டு பின்னல், இருபட்டுப் பின்னல், முப்பட்டு பின்னல் போன்றவற்றை உபயோகித்து இரேந்தைப் பட்டிகளைப் பின்னலாம்.

இரேந்தை பின்னல் முறையைப் பின்பற்றி வூலையும் பின்னலாம். வூல் பின்னலுக்காக கைரேந்தை ஊசிக்கு சமமான ஊசியும் ஒரே முறையில் பயன்படுத்துவதற்கு வேறு வகை இரண்டு ஊசிகளும் காணப்படுகின்றன.



தனி ஊசி



இரண்டு ஊசி

பின்னல் ஊசியின் துணை கொண்டு வூலை ஊடகமாக்கிக் கொண்டு குழந்தைகளின் தொப்பி, உடை, சப்பாத்து, மப்ளர் போன்ற பொருட்களையும் பின்னலாம். பின்னலுக்காகப் பயன்படுத்தப்படும் வூல் பல்வேறு முறைகளில் அமைந்து காணப்படும். ஆடைகளின் தன்மைக்கேற்ப வித்தியாசமான இலக்கங்களையுடைய வூல்களையும் எடுக்க வேண்டும். தனி ஊசியைப் பயன்படுத்தி பல்வேறு வகையான குழந்தைகள், பாலர்களின் தொப்பிகள், சப்பாத்து, பாதணி ஆகியவற்றை பின்னலாம்.



வூல்களினால் பின்னப்பட்ட தொப்பி, ஆடை, கவர்ச்சிப் பொருட்கள்





**வூல்களினால் பின்னப்பட்ட தொப்பிகள்**

பாலர்கள் முதல் 3,4 வயதுள்ள குழந்தைகள், வயது வந்தவர்கள் ஆகியோரின் பாவனைக்காக வூல் ஆடை பின்னலாம். விசேடமாக குழந்தைகள் அதிகமாக அணியும் தொப்பிகளைப் பின்னுவது எல்லாக் காலத்துக்கும் பொருத்தமுடையதாகும்.

முகத்தைச் சுற்றி சுற்று இருக்குமாறு வூல் தொப்பிகளைப் பின்னுவது குழந்தைகளுக்கு கவர்ச்சியானதாக இருக்கும்.

## குழந்தைகளின் தொப்பி பின்னல்



- 25 சங்கிலிப் பின்னல்.
- ஒரு சங்கிலிக்கு இரு பக்கமாக இரு பின்னலை இட்டு 8 வரிகளைப் பின்னல்.
- 9 ஆவது வரியில் அதையே மூன்று பின்னலாகப் பின்னல்.
- இரண்டு வரிசைப் பின்னல்கள் 3 ஐ விட்டு ஒன்றுக்கு மூன்று வீதம் இரு வரிசை பின்னலை 3 வீதம் பின்னல்.
- அரை வட்டமாக இருக்கக் கூடியவாறு 7 வரிகளைப் பின்னல்.
- 6 சங்கிலிகளைப் பின்னி, இரண்டு சங்கிலிகளை விட்டு இணைத்தல்.

பிறில் உடனான தொப்பி

- அடுத்த சுற்றில் மீண்டும் 6 சங்கிலிகளைப் பின்னி முன்பு பின்னப்பட்ட சங்கிலிகளுடன் இணைத்தல்.
- 6 சங்கிலிகளின் ஒரு பகுதிக்கு இரு வரிப் பின்னல் மூன்றினைப் பின்னல்.
- ஒரு சங்கிலிக்கு இரு வரிப் பின்னல் மூன்றைப் பின்னி சுருக்கு இருக்கக் கூடியவாறு சங்கிலியை மும்மூன்றாகப் பின்னல்.
- தொப்பியை தலையில் நிறுத்திக் கொள்வதை இலகுவாக்கிக் கொள்வதற்காக முடிச்சிடலுக்கு ஒரு பட்டியலைப் பின்னி முடிவு செய்தல்.



**இரு காதுகளையும் மூடும் தொப்பி**



**வளையல் இட்ட அலங்காரத் தொப்பி**

- மழைநாள் அல்லது குளிர் அதிகமுள்ள தினங்களில் குழந்தைகளின் இரு காதுகளும் மறைந்திருக்கக் கூடியதாக தொப்பி பின்னலாம். இது அழகாக இருப்பதோடு ஆரோக்கியத்திற்கும் உகந்ததாக அமையும்.
- மாலை நேரங்களிலும், சுற்றுலாவின் போதும் அணியக் கூடிய வட்டமான தொப்பி அழகில் கூடியது. இதற்காக கம்பி வளையல் ஒன்றைப் பயன்படுத்தி அழகான ஒரு முடிவைப் பெற்றுக் கொள்ளலாம்.




துளையிடப்பட்ட அழகான தொப்பி

★ துளையிட்டுப் பின்னுவதால் அதன் அழகுத் தன்மை மென்மேலும் விருத்தியடையும். சிறந்ததொரு முடிவுப் பொருளாக விடுவதற்கு கம்பியை பயன்படுத்துவது உகந்தது.

தொப்பி மாத்திரமின்றி குழந்தைகளின் பாதணி (சப்பாத்து), ஆடைகள் என்பவற்றைப் பின்னலாம்.

# 5.2 இரண்டு ஊசிகளால் பின்னல்.

வூல் பின்னலுக்காக இரு ஊசிகளைப் பயன்படுத்தியும் பின்னலைச் செய்யலாம்.




பின்னலுக்காக ஊசியைச் செலுத்துதல்



1. இடது கையில் ஊசியை எடுத்து வளையல் ஒன்றைச் செய்து ஆரம்பித்தல் வளையலைச் செய்கையில் 20 அளவுள்ள நூலை அந்தத்தில் மீதப்படுத்தல்.

2. வலக் கையிலுள்ள ஊசி துளையினுள்ளே முன்பக்கத்தால் உள்ளே செலுத்துதல்.





3. அவ்வாறு உட்செலுத்திய ஊசியை பின்புறத்தில் உள்ள வூல்பட்டுக்கு அடியால் எடுத்து ஊசியால் இணைத்து இன்னுமொரு வளை ஆகுமாறு மேல் எடுத்தல்.

4. வலக்கை ஊசியினால் முன்னே எடுத்த துளையை அந்த ஊசியிலேயே நிறுத்திக் கொள்ளல்.





5. வலக்கை ஊசியின் மீது புதிய துளையை இடக்கையால் உள்ள ஊசிக்கு பாவித்தல்.



6. இடக்கை ஊசியிலுள்ள இறுதி பட்டி இரண்டுக்கும் இடையில் வலக்கை ஊசியைச் செலுத்துதல்.



7. மீண்டும் வலக்கை ஊசிக்கு நூலை இணைத்து துளையொன்றை ஆக்குதல்.



8. மீண்டும் புதிய துளையை இடக்கை ஊசிக்குப் பாவிப்பதால் புதிய துளையொன்று ஏற்படும்.



9. தேவையான அளவு துளைகளை (Loop) தயாரித்த பின் வலக்கை ஊசிக்கு மாறக் கூடிய வகையில் பின்னுதல்.


10. இடக்கை ஊசியிலுள்ள துளைக்கு (Loop) கீழே தன்னை முன்னோக்கி ஊசியைச் செலுத்தி வூல் (Wool) பட்டுக்கு மேலால் இணைத்து மீண்டும் தனது பக்கத்திற்கு பாவித்துக் கொள்ளலாம்.





11. வலக்கை ஊசியை மீண்டும் மீண்டும் இடக்கை ஊசியின் துளைக்குள் இட்டு சிறிது சிறிதாக பட்டுக்களை வலக்கை ஊசிவிட்டு பாய்த்துக் கொள்ளல்.

12. முன்னைப் போலவே ஒன்றை ஒன்று பின்னி வலக்கை ஊசிக்கு எல்லாப் பின்னல்களையும் பாவித்துக் கொள்ளல். இந்த பின்னல் முறை 'நீட்' பின்னல் என அழைக்கப்படும்.





13. அடுத்த வரிசைப் பின்னுவதற்காக வலக்கை ஊசியை இடக்கைக்கு எடுத்தல்.

14. இடக்கை ஊசியிலுள்ள துளை ஊடே வலக்கை ஊசியை பின்புறமாக முன்னே எடுத்து வலப்பக்கத்தில் இருந்து இடப்பக்கமாக இணைத்து துளையினால் பாவித்துக் கொள்ளல்.





15. அவ்வாறு பின்னி வலக்கை ஊசிக்கு பின்னலைத் தொடர்பு படுத்தல்.

16. எல்லாப் புரிகளையும் ஒன்றுடன் ஒன்று பாவித்து எல்லாப் பின்னலையும் வலக்கை ஊசிக்கு எடுத்தல் இவ்வாறு பின்னும் முறை 'பேர்ல் பின்னல்' என அழைக்கப்படும்.



தேவையான அளவு பூரணமாக்கும் வரை 'நீட் பேர்ல்' என்ற வகையில் பின்னல்.

இம்முறை ஆடை பின்னல் சம்பிரதாய பூர்வமான ஒன்றாகும். குழந்தை ஆடைகள், காற்சட்டை, மேலாடை மப்ளர், தொப்பி என்பன விசேட இடத்தைப் பிடித்துள்ளன.







இவ்வாறு சம்பிரதாயபூர்வப் பின்னலை தவிர்த்து வேறு அலங்காரப் பொருட்களையும் தயாரிக்க முடியும் என்பது விசேடமாகக் குறிப்பிடலாம்.

சிறிய பிள்ளைகள் மிகவும் விரும்பும் விளையாட்டுப் பொருட்கள், விளையாட்டு விலங்கினங்கள் மற்றும் கவர்ச்சியான ஆக்கங்கள் என்பவற்றையும் இந்த பின்னல் முறையைப் பயன்படுத்திச் செய்யலாம்.







**பயிற்சி :**

01. சிறு பிள்ளையொன்றுக்கான ஆடை அலங்காரமொன்றை உருவாக்குக.
02. பின்னலின் மூலம் சிறுமியொன்றுக்கான ஆடை வடிவலங்காரமொன்றை உருவாக்குக.